# செவ்வியல் இலக்கியங்களில் அஃறிணை வாழ்த்துகள்

**வி. கலாவதி**
கௌரவ விரிவுரையாளர் (தமிழ்)
தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்
சென்னை – 600127.
முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.
(பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்டது)
பதிவு எண் –BDU2020632778717

**நெறியாளர் முனைவர் ஜோ. அருணாதேவி அவர்கள்.**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.
(பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்டது)

## ஆய்வுச் சுருக்கம்

செவ்வியல் இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டு மரபுகளைப் பறைசாற்றும் வரலாற்றுப் பெட்டகங்கள் என்றால் அது மிகையல்ல1 மேலும் செவ்வியல் இலக்கியங்களில்இயற்கையின் படைப்புகளானஅஃறிணைகளில் நிலம்,பொழுது,ஆகாயம்,ஞாயிறு,நிலவு,மேகம்,மழை,விலங்குகள்,பறவைகள்,பூச்சிகள்,பூக்கள்,போர்க் கருவிகள்,உண்ணும் உணவுகள் போன்ற அனைத்தையும் வாழ்த்திய முறைகளும் அவற்றின் மேல் நம் முன்னோர்கள் கொண்ட அன்பும் எக்காரணங்களுக்காகவெல்லாம் அஃறிணைகளை வாழ்த்தினார்கள் என்பதும் அதனால் அவர்களின் வாழ்வு முறைகள் எவ்வளவு எளிமையாகவும் அமைதியாகவும் இருந்தன என்பது பற்றியும் விளக்கமாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறி சொற்கள்

செவ்வியல் இலக்கியங்கள், அஃறிணை, வாழ்த்துகள், அறப்பண்புகள், எதிர்கால சந்ததியினர்.

**ABSTRACT**

It would not be an exaggeration to say that classical literature is a repository of history that showcases the cultural traditions of the Tamils.Moreover, in classical literature, the works of nature, such as Land, Time, Sky, Sun, Moon, Cloud, Rain, Animals, Birds, Insects, Flowers, Battles, etc.The purpose of this article is to examine in detail the manner in which all things were greeted by tools, food, etc., and the love our forefathers had for them, and for what reasons they greeted them, and how simple and peaceful their ways of life were.

**KEY WORDS**
Classical literature, Affinity, Greetings, Virtues, Future Generations.

## முன்னுரை

சீறியாழ் செவ்வழி பண்ணி, யாழநின்
கார் எதிர் **கானம் பாடினேமாக**,
(புறநானூறு-144;2-3).

செவ்வியல் இலக்கியங்களே நம் தமிழ் மொழியின் அடித்தளமாகத் திகழ்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அவ்விலக்கியங்களில் மக்களின் வாழ்வினைச் செம்மைப்படுத்தும் விதமாக பல்வேறு அறப்பண்புகளும் நீதி முறைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அஃறிணைகளை வாழ்த்தும் முறைகள் மிக அழகாக எடுத்தாளப்பட்டுள்ளன. இதனைக் கருத்திற் கொண்டே '**செவ்வியல் இலக்கியங்களில் அஃறிணை வாழ்த்துகள்**' எனும் பொருண்மையினைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வுமுறை

செவ்வியல் இலக்கியங்களில் எங்கெல்லாம் வாழ்த்துச் செய்திகள் காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் தேடி, நுணுகி ஆராய்ந்து விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளதால் விளக்கமுறை ஆய்வே இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளது.

## ஆய்வு நூல்கள் பற்றிய குறிப்புகள்

**அட்டவணை 1**

| வ.எண் | நூல்கள் | உரையாசிரியர்கள் | காலம் |
|---|---|---|---|
| 1 | நற்றிணை மூலமும் உரையும் | முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.-அம்பத்தூர்-சென்னை. | ஏப்ரல் -2004 |
| 2 | எட்டுத்தொகை- மூலமும் தெளிவுரையும்(குறுந்தொகை)தொகுதி-1 | தமிழூர்-முனைவர்.<br>ச.வே.சுப்பிரமணியன் | ஜூன்-2010 |
| 3 | ஐங்குறுநூறு-மூலமும் உரையும் | பெருமழைப் புலவர்.பொ.வே.சோமசுந்தரனார்.<br>திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட் | மு.பதிப்பு-1961 |
| 4 | பதிற்றுப்பத்து-மூலமும் உரையும் | முனைவர்.அ.ஆலிஸ்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.-அம்பத்தூர்-சென்னை. | மு.பதிப்பு - ஏப்ரல்-2004 |

| | | | |
|---|---|---|---|
| 5 | பரிபாடல் –மூலமும் பரிமேலழகருரையும் | மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் – சென்னை 41 | மு.பதிப்பு–1918 ஐ.பதிப்பு–1980 |
| 6 | கலித்தொகை– மூலமும் நச்சினார்க்கினியருரையும் | பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் இ.வை.அனந்தராமையர். நோபில் அச்சுக்கூடம், மறைமலையடிகள் நூல்நிலையம்–சென்னை–1 | ஆண்டு –1925 |
| 7 | அகநானூறு–மூலமும் உரையும் | வ.த.இராமசுப்பிரமணியம்.எம்.ஏ. திருமகள் நிலையம் | மு.பதிப்பு–ஜூலை –2009 |
| 8 | புறநானூறு –மூலமும் உரையும்(பகுதி –1,2) | முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் முனைவர்.அ.விசுவநாதன் முனைவர்.வி.நாகராசன் முனைவர்.இரா.ஆரோக்கியசாமி முனைவர்.க.திலகவதி முனைவர்.வெ.சத்தியநாராயணன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.– அம்பத்தூர்–சென்னை. | மு.பதிப்பு–ஏப்ரல் –2004 5.ம் பதிப்பு–2014 |
| 9 | பத்துப்பாட்டு –மூலமும் ஆராய்ச்சியுரையும் (திருமுருகாற்றுப்படை) | ஸ்ரீ.உ.வே.வை.மு.கோபாலகிருஷ்ணமாசார்யரும், அவர் மாணக்கர் வித்வான் ஜெகந்நாதாசார்யரும் இயற்றிய ஆராய்ச்சியுரையுடன் வை.மு.நரசிம்மன். வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி–திருவல்லிக்கேணி–சென்னை–5 | சார்வரி ஆண்டு –தை மாதம் 14-01-1961. |
| 10 | சிலப்பதிகாரம்–மூலமும் உரையும் | நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட். | மு.பதிப்பு–1942 இ.பதிப்பு–ஜூலை –1999 |

| | | | |
|---|---|---|---|
| 11 | மணிமேகலை-மூலமும் விளக்கவுரையும் | நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள்(26 காதைகள்) மற்றும் வித்துவான் ஒளவை சு.துரைசாமிப் பிள்ளை(4 காதைகள்) இயற்றிய விளக்கவுரை. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட், சென்னை-18. | பதிப்பு-1994 |

**ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நூல்களில் காணும் அஃறிணை வாழ்த்துச் செய்திகள்**
**அட்டவணை 2**

| வ.எண் | நூல்கள் | வாழ்த்துச்செய்திகளின் எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | நற்றிணை மூலமும் உரையும் | 5 |
| 2 | எட்டுத்தொகை- மூலமும் தெளிவுரையும்(குறுந்தொகை)தொகுதி-1 | 5 |
| 3 | ஐங்குறுநூறு-மூலமும் உரையும் | 2 |
| 4 | பதிற்றுப்பத்து-மூலமும் உரையும் | 4 |
| 5 | பரிபாடல் -மூலமும் பரிமேலழகருரையும் | 3 |
| 6 | கலித்தொகை-மூலமும் நச்சினார்க்கினியருரையும் | 3 |
| 7 | அகநானூறு-மூலமும் உரையும் | 7 |
| 8 | புறநானூறு -மூலமும் உரையும் | 8 |
| 9 | பத்துப்பாட்டு -மூலமும் ஆராய்ச்சியுரையும் (திருமுருகாற்றுப்படை) | 2 |
| 10 | சிலப்பதிகாரம்-மூலமும் உரையும் | 12 |
| 11 | மணிமேகலை-மூலமும் விளக்கவுரையும் | 2 |
| மொத்தம் | 11 நூல்கள் | 53 வாழ்த்துச்செய்திகள் |

## அஃறிணை வாழ்த்துச் செய்திகள்

### இறைவனுக்குரிய அஃறிணைகளை வாழ்த்துதல்

**ஆதிசேடனை வாழ்த்துதல்**

சங்க கால மக்கள் தங்கள் சுற்றத்தோடு இணைந்திருப்பதனையே விரும்பினர் என்பதையும் திருமாலை வணங்கும் முன் திருமாலுக்கு நிழல் தரும் ஆயிரம் தலைகள் கொண்ட பாம்பான ஆதிசேடனை வணங்கி வாழ்த்திய பிறகே திருமாலை வணங்கும் முறையை மரபாகக் கொண்டிருந்தனர் என்பதனையும்

அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி

**நல்லடி ஏத்தி** நின் பரவுதும்
எல்லேம் பிரியற்கெம் சுற்றமொடு ஒருங்கே
(பரிபாடல்-79-82)
என்ற பரிபாடல் செய்யுள் வழி நம்மால் அறியமுடிகிறது.

**முருக பெருமானின் யானை, கோழிக் கொடி மற்றும் கடம்பமரத்தினை வாழ்த்துதல்**
திருமுருகாற்றுப்படையில்,
குறிஞ்சி நிலப்பகுதியின் கடவுளான முருகக் கடவுளைஆற்றுப்படுத்துவதன் பொருட்டும் அங்கு வாழும் குறமகளிர் தங்களுக்கும் தங்கள் சுற்றத்திற்கும் வேண்டியவற்றைப் பெறுவதன் பொருட்டும் தாங்கள் வாழும் **மலையை வாழ்த்தி** பின்னர் முருகனின் வாகனமாகக் கருதப்படும் **யானையையும் வாழ்த்திய** பின்னரே இறைவனை வணங்கிய மரபு காணப்படுகிறது. மேலும் அசுரர்களை வென்று அவ்வெற்றி குறித்துத் தூக்கியதாகக் கருதப்படும் கோழிக்கொடியையும் சூரர மகளிர் வாழ்த்தி ஆடிப்பாடிய மரபும் காணப்படுகிறது.

மேலும் அகநானூற்றில்,
மலையிலிருந்து வீழும் அருவி போல் வாத்தியங்கள் முழங்க முருக பெருமானின் **கடம்ப மரத்தினையும் யானையையும் புகழ்ந்து வாழ்த்திய** பிறகு முருகக் கடவுளைத் தொழுது வணங்கினர். என்பதனை
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல்நகர்
**ஆடுகளம் சிலம்பப் பாடி**, பலவுடன்
கோடு வாய் வைத்து, கொடு மணி இயக்கி,
ஓடாப் பூட்கைப் **பிணிமுகம் வாழ்த்தி**
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த வாறே!
(திருமுருகாற்றுப்படை 244-249)

கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி
**வாழிய பெரிது**! என்று **ஏத்தி**, பலர்உடன்
சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை
(திருமுருகாற்றுப்படை 38-41)

அருஞ்சிமை இழிதரும் ஆர்த்து வரல் அருவியின்
ததும்பு சீர் இன்இயம் கறங்கை கைதொழுது
உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ,
**கடம்பும் களிறும் பாடி** ......
(அகநானூறு-பா 138;8-11)
என்ற பாடல்கள் வழி நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.

**முதற்பொருள்களை வாழ்த்துதல்**
தொல்காப்பியர் கூறும் அகப்பொருள் இலக்கணத்தில் முதன்மையானது அன்பின் ஐந்திணையே ஆகும். இந்த ஐந்திணைக்கும் முதன்மையும் அடிப்படையுமான

பொருளே முதற்பொருள் ஆகும். அவை **நிலமும் பொழுதும்** என்பதே தொல்காப்பியரின் கூற்றாகும்.ஆகவே தான் நம் சங்ககால மக்கள் தமது வாழ்விற்கு அடிப்படையான நிலத்தையும் பொழுதினையும் ஒவ்வொரு சூழலிலும் மிக அழகாக வாழ்த்தியுள்ளனர்.

**மலையினை வாழ்த்துதல்**

அரிய வீடின்பப் பேற்றினை எளிதாக அடையும் உரிமையைத் தரவல்லது திருமால் கோயில் கொண்டுள்ள திருமாலிருஞ்சோலை மலை. எனவே இம்மலையினை வாழ்த்திவிட்டு பின்பு திருமாலைப் போற்றிப் புகழ்வோம் என்றும் பாணர்கள் வைகறைப் பொழுதில் மன்னனது கடைவாயிலில் நின்று தன் குன்றத்தை வாழ்த்தியும் போற்றியும் பாடி அதற்கான பரிசாக யானையை வள்ளல் ஆஅய் எயினனிடம் பெற்றனர் என்றும்

தலைவி தன் தோழியிடம் 'தலைவன் தனக்கு மருந்தில்லாத நோயைக் கொடுத்துள்ளான். எனவே அவனுடைய பயன்தரும் மலையை வாழ்த்தி நம் கருத்திற்கு வேண்டியத் தக்கவாறெல்லாம் பாடுவோம்' என்று கூறி தலைவனை இகழ்ந்தும் அவன் வாழும் மலையினை வாழ்த்தியும் பாடினர் என்றும் கீழ்க்கண்டப் பாடல்கள் வழி நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.

அரிதில் பெறு துறக்கம் மால் இரும்குன்றம்
எளிதில் பெறல் உரிமை **ஏத்தகம் சிலம்ப**
(பரிபாடல்-15;14-15)

யாம இரவின் நெடுங்கடை நின்று
தேம் முதிர் சிமையக் **குன்றம் பாடும்**
நுண்கோல் அகவுநர் வேண்டின் ....
(அகநானூறு-208;1-3)

பகைஇல் நோய் செய்தான் **பயமலை ஏத்தி**
அகவினம் பாடுவோம் நாம்
(கலித்தொகை -40;6-7).

**காட்டினை வாழ்த்துதல்**

தலைவன் தன்னைப் பிரிந்து வினைவயிற் பொருட்டு மற்ற வீரர்களுடன் சேர்ந்து காட்டுவழியில் செல்வதால் அந்தக் காடானதுஅழகு பெறுக! என்று தலைவியானவள் தன் தோழியிடம் கூறி காட்டினை வாழ்த்தும் முறையையும்முல்லைநிலத்தில் ''தலைமைச் சிறப்புடைய ஏறுகளையும் நம் காதலர்களையும் பாதுகாத்து வண்டுகள் ஒலிக்கும் காட்டினை நாம் வாழ்த்தியும் திருமாலை வணங்கியும் பாடுவோமாக'' என்று ஆய்ச்சியர் பாடும் முறையையும்பாணர்கள் மாலை நேரத்தில் பெய்யும் மழையை ஏற்றுக்கொண்ட காட்டினை தன் சிறிய யாழில் இரங்கற் பண்ணாகிய செவ்வழி என்னும் பண்ணினை இசைத்து வாழ்த்திப் பாடிய முறையையும் கீழ்க்கண்ட பாடல்கள் வழி நம்மால் மிகவும் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

திருந்து வேல் இளையர் சுரும்பு உண மலைமார்

மாமுறி ஈன்று மரக்கொம்பு அகைப்ப,
உறை கழிந்து உலந்த பின்றை பொறைய,
சிறுவெள் அருவித் துவலையின் மலர்ந்த,
கருங்காய் நுணவின் பெருஞ்சினை வான்பூச்
செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்பக்

**காடுகவின் பெறுக தோழி**!
(அகநானூறு-345;12-18)

அருந்தலை ஏற்றொடு காதலர்ப் பேணி,
சுரும்பு இமிழ் **கானம் நாம் பாடினம் பரவுதும்**;
(கலித்தொகை -மு.கலி-106;47-48)

**ஊரினை வாழ்த்துதல்**

‘நம் நாட்டிலுள்ள பழையான ஊர்கள் எல்லாம் நம் நாட்டிற்கு பிழைக்க வரும் புதியவர்களைக் காக்கும் பண்புடையனவாகுக’ என்று வாழ்த்தும் முறைமையும்பொதிகை மலையும் இமய மலையும் பூம்புகார் நகரமும் பழமையானக் குடியில் தோன்றிய மக்கள் வாழும் இடங்கள் ஆதலால் இவை மூன்றும் நிலைபெற்று வாழ்க என்று வாழ்த்தும் முறைமையும்ஊரில் நடைபெறும் விழாக்களைப் பற்றி முரசறைந்து கூறுபவர் முதலில் தன் நாடும் அங்கு வாழும் மக்களும் பசி, பிணிமற்றும் பகையும் இன்றி வாழுமாறு வாழ்த்திவிட்ட பின்பே தான் அறிவிக்கவிருக்கும் கருத்தினைக் கூறும் முறைமையும்சங்ககால மக்கள் தாங்கள் வாழுகின்ற ஊரினையும் நாட்டினையும் நேசித்த விதத்தினை நமக்கு எடுத்தியம்புகிறது என்றால் அது மிகையல்ல1 இதனை,

நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி,
(திருமுருகாற்றுப்படை -238)

வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அறிந்த மாக்கட்கு ஆகுக.
(அகநானூறு -15;6-8)

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலியுலகிற் கவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்.
(சிலம்பு – ம.வா.பாடல் 11-13)

பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்

நடுக்கின்றி நிலைஇய ......
(சிலம்பு – ம.வா.பாடல் 14-17)

காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ – வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்.
(சிலம்பு-நாடுகாண்காதை-வெண்பா)

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்
(மணிமேகலை-விழாவறைக்காதை-70-72)
மேற்கண்டப் பாடல்களின் பொருளாழத்தால் நம்மால் அறியமுடிகிறது.

**போர்க்களத்தினை வாழ்த்துதல்**

.... .... .... இளையர்
இன் களி வழாஅ மென் சொல் அமர்ந்து,
நெஞ்சு மலி உவகையர் **வியன்களம் வாழ்த்த**
(பதிற்றுப்பத்து-40;24-26)

மென்சொல்லினை உடைய பாணர்களின் சிறுவர்கள் இளையராக இருந்தாலும் அகன்ற போர்க்களத்தினை வாழ்த்தும் மரபும் பதிற்றுப்பத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**பாலை நிலத்தினை வாழ்த்துதல்**

தோழியானவள் உடன்போக்கு நிகழ்த்தும் தமது தலைவனும் தலைவியும் செல்லும் நிலமானது வெம்மை தணிந்து இனிமை ஆகுக! என்று பாலைநிலத்தினைவாழ்த்தும் முறையையும்
மகள் தன் தலைவனுடன் சுரத்தின் வழியே உடன்போக்கினை மேற்கொண்டதால் அந்நிலப்பகுதியானது மழை பொழிந்து வெம்மை தணிந்து இனியனவாகுக! என்று கூறும் தாயின் கூற்றையும் நோக்கும் பொழுது சங்ககால மக்கள் இயற்கையின் மீது கொண்டிருந்த பற்று நமக்குப் புலனாகிறது.

விசும்புடன் இருண்டு வெம்மை நீங்கப்
பசுங்கண் வானம் பாய்தளி பொழிந்தெனப்
---- ---- ---- ----
வண்ண மூதாய் தண்நிலம் வரிப்ப
**இனிய ஆகுக** தணிந்தே,
இன்னா நீப்பின் நின்னொடு செலற்கே
(அகநானூறு-283;11-12,15-17)

மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்

**சுரநனி யினிய வாகுக** தில்ல;
(ஐங்குறுநூறு-371;1-3)

மேற்கண்ட பாடல்கள்
"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" – என்ற சிலப்பதிகாரச் செய்யுளோடு ஒப்புநோக்கத்தக்கது.

**மாலைப்பொழுதினை வாழ்த்துதல்**

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று வாழியோ மாலை!
(குறுந்தொகை-122;1-3)

பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலைநீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை
(சிலம்பு-கானல்வரி-50-54)

தலைவனும் தலைவியும் ஒன்றிணைந்து இருக்கும் பொழுது மகிழ்வுடன் மாலைப்பொழுதின் வருகையை மிகச் செம்மையாக வருணித்து வாழ்த்தியும் பிரிவு மேற்கொண்ட பொழுது மாலைப்பொழுதின் வருகையைமிக வருத்தத்துடன் எதிர்க்கொண்டாலும் இகழ்ச்சிக் குறிப்பில் வாழ்த்தியும் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் முறையை மேற்கண்டப் பாடல்கள் மூலம்செவ்வியல் இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

**நீரினை வாழ்த்துதல்**

இரும் பனையின் குரும்பை நீரும்,
பூங் கரும்பின் தீம் சாறும்,
ஓங்கு மணல் குவவுத் தாழைத்
தீம் நீரொடு உடன் விராஅய்,
முந் நீர் உண்டு முந்நீர்ப் பாயும்;
(புறநானூறு 24)

கடலில் பொழிந்து கடல் வளத்தைப் பெருக்கும் மழைநீர், ஆறு அடித்துக்கொண்டு வரும் மழைநீர், மண்ணிலிருந்து ஊறிவரும் ஊற்றுநீர் ஆகிய மூன்று நீரும் கலந்ததே முந்நீராகும். மேலும் உயிர்கள் அனைத்தின் ஆதாரமாக விளங்குவது நீரே ஆகும். இதனை உணர்ந்தே சங்ககால மக்கள் நீரினை வாழ்த்தி வழிபட்டுள்ளனர். தலைவன் பிரிவு மேற்கொண்ட பொழுது திரும்பி வருவேன் என்று கூறிச் சென்ற பருவம் தவறியதால் தலைவி மனம் வருந்தி இருக்கும் நிலையில் மழையும்

பொழிந்து அவளது வருத்தத்தை மேலும் அதிகப்படுத்தியபோது தோழியானவள் அவளை சமாதானப்படுத்தும் நோக்கத்தில் மழையை இகழ்ச்சிக் குறிப்பில் வாழ்த்தும் முறையை நற்றிணை மிக அழகாக எடுத்தியம்புவதை நம்மால் காண முடிகிறது. மதுரை மாநகரில் வாழுகின்ற மக்கள் வருந்தாத வண்ணம் பாய்ந்தோடும் வையை ஆற்றினை மக்களும் பாணர்களும் கூத்தர்களும் தங்கள் சுற்றத்துடன் இணைந்து விருந்திட்டு ஆடிப் பாடி வாழ்த்தி வணங்கிய மரபினை அழகாகப் பறைசாற்றுகிறது நம் பரிபாடல் செய்யுள்கள் என்றால் அது மிகையல்ல1 சிலப்பதிகாரத்திலும் மழைநீர், கடல் வெள்ளம்,காவேரி ஆறு, மற்றும் பொய்கைகளானசரவணப்பொய்கை,பவகாரணி, இட்டசித்தி போன்ற அனைத்து நீர்களையும் நீர்நிலைகளையும் வாழ்த்திய மரபு ஒப்புநோக்கத்தக்கது.மேலும் தலைவனானவன் தனது குறிஞ்சி நில குறமகளாகிய தலைவியின் தினைப்புனத்தில் மழை பெய்து தினைப்புனத்தை செழிக்கச் செய்ததால் மழையே நீ வாழ்வாயாக! என்று வாழ்த்தும் வனப்பினை அகநானூறு சுவைபட கூறியுள்ளதையும் கீழ்வரும் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அன்பு இன்மையின் பண்பு இல பயிற்றும்
பொய் இடி அதிர் குரல் வாய் செத்து ஆலும்
இன மயில் மடக் கணம் போல,
நினை மருள் வேனோ? **வாழியர்**, **மழையே**!
(நற்றிணை-248;6-9)

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ,
.... ...... ...... .........
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ! **வாழிய மழையே**!
(அகநானூறு-188;1,11-13)

வருந்தாது வரும்புனல் விருந்தயர்கூடல்
அருங்கறை அறைஇசை வயிரியர் உரிமை
ஒருங்கமர் ஆயமொடு **ஏத்தினர் தொழவே**.
(பரிபாடல்-10;129-131)

**மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும்**
நாமநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்த லான்.
(சிலம்பு-ம.வா.பாடல்-7-9)

நேர்ந்ததங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்தவழி சிதைய **ஊர்ந்தாய்வாழி கடலோதம்**
(சிலம்பு-கானல்வரி-36-37)

சென்னி செங்கோ லதுவோச்சிக்

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
**புலவாய் வாழி காவேரி**.
(சிலம்பு-கானல்வரி-வேறு-2)

விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும் பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்கு.
(சிலம்பு-காடுகாண்காதை-93-97)

**வானினையும் மேகத்தையும் வாழ்த்துதல்**

தாழ்இருள் துமிய மின்னித் தண்ணென
வீழ்உறை இனிய சிதறி, ஊழின்
கடிப்புஇரு முரசின் முழங்கி, இடித்து இடித்துப்
பெய்க இனி; **வாழியோ**, **பெருவான்**! யாமே,
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவினம் ஆகி, ....
(குறுந்தொகை-270;1-6)

உலகிற்கு ஆணியாகப் பலர்தொழ,
பல வயின் **நிலைஇய** குன்றின் கோடுதோறு
ஏயினை, உரைஇயரோ! -**பெருங்கலி எழிலி**!
(நற்றிணை-139;1-3)

மேற்கண்ட பாடல்களின் மூலம் வினைமுற்றி மீண்டும் இல்லத்திற்கு வந்த தலைமகன் தன் தலைவியுடன் இனிதாக பள்ளி கொள்ளும் சூழலில், மழை பொழியும் நேரத்தில் 'இனிய மழையினைப் பொழிகின்றதால் வானமே வானில் உள்ள மேகமே நீர் வாழ்க' என்று வானினையும் மேகத்தினையும் வாழ்த்தும் மரபு பின்பற்றப்பட்ட விதத்தினை நம்மால் அறியமுடிகிறது.

**ஞாயிற்றை வாழ்த்துதல்**

இருளொடு யான் ஈங்கு உழப்ப, என் இன்றிப் பட்டாய்
அருள்இலை; **வாழி-சுடர்**!
(கலித்தொகை-நெ.கலி-143;42-43)

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.
(சிலம்பு-ம.வா.பாடல்-4-6)

நாடு வளம்செழிக்க கதிரவனின் ஒளியும் மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்து ஞாயிற்றை வாழ்த்திய முறையும் தலைவியானவள் மாலை நேரத்தில் பிரிவிடை

ஆற்றாமல் ஞாயிற்றை இகழ்ச்சிக் குறிப்பால் வாழ்த்தும் முறையினையும் மேற்கண்ட பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**திங்களை வாழ்த்துதல்**

**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கன் உலகளித்த லான்,
(சிலம்பு-ம.வா.பாடல்-1-3)

**குழவித் திங்கள் இமையவ ரேத்த**
அழகொடு முடித்த அருமைத் தாயினும்
(சிலம்பு-மனை.ப.காதை-38-39)

மக்களுக்கு நிலவின் குளிர்ச்சி போல் மன்னவனது ஆட்சிநிலை இருந்ததால் நிலவினை ஒப்புமை கூறி வாழ்த்தி மகிழ்வுற்ற பாங்கும் மற்றும் இளம்பிறையை வாழ்த்தி வணங்கும் பாங்கும் மேற்கண்ட சிலப்பதிகாரப் பாடல்கள் வழி நம்மால் அறியமுடிகிறது.

**வாடைக் காற்றினை வாழ்த்துதல்**

தலைவனது பிரிவிடையாற் தலைவி வருந்தும் போது 'வாடைக்காற்றே நீயும் சென்று அவளை வருத்தாதே, மாறாக அவளைப் பாதுகாப்பாயாக!மேலும் நீ வாழ்வாயாக! என்ற தலைவனது கூற்றின் மூலம் நமது செவ்வியல் இலக்கியங்கள் எவ்வாறு மக்களது மன உணர்வுகளையும் அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த முறையையும் மிக நுணுக்கமாக எடுத்துரைக்கிறது என்பதை நம்மால் அறியமுடிகிறது.

ஓம்புமதி; **வாழியோ வாடை**!பாம்பின்
தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவிக்
கல்உயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே.
(குறுந்தொகை-235;1-5)

**மன்னனது வேலினை வாழ்த்துதல்**

இகழுநர் இசையொடு மாய
புகழொடு விளங்கிப் பூக்க, நின் வேலே!
(புறநானூறு-21;12-13)

.... .... வெல்இயர் நின் வேலே!
(புறநானூறு-202;17)

செவ்வியல் இலக்கியங்களில் மன்னனது வீரமிக்க வேலினை வாழ்த்தும் மரபும் காணப்பட்டது என்பதனை இப்புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**மன்னனது கண்ணியை (மாலை) வாழ்த்துதல்**

துணிகொள் பருவரல் தீர வந்தோய்!
இனிதுசெய் தனையால் **வாழ்க நின்கண்ணி**!
(அகநானூறு-314;17-18)

...... **வாழ்க, நின் கண்ணி**! - காண் வர
விரி உளைப் பொலிந்த வீங்கு செலல் கலிமா
(நற்றிணை-121;7-8)

குறுந் தொடி கழித்த கைச் சாபம் பற்றி,
நெடுந் தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார் கொல்? **வாழ்க, அவன் கண்ணி**...
(புறநானூறு-77;4-6)
அறியாது எதிர்ந்து, துப்பில் குறையுற்று,
பணிந்து திறை தருப, நின் பகைவர், ஆயின்
சினம் செலத் தணியுமோ? **வாழ்க, நின் கண்ணி**!
(பதிற்றுப்பத்து-59;11-13)
பா அல் வல்லாய் ஆயினை, பாஅல்
யாங்கு வல்லுநையோ- **வாழ்க, நின் கண்ணி**!
(பதிற்றுப்பத்து-52;26-27)

வள்ளியை என்றலின், காண்கு வந்திசினே;
உள்ளியது முடித்தி; **வாழ்க, நின் கண்ணி**!
(பதிற்றுப்பத்து-53;1-2)
விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்,
கோடியர் முழவின் முன்னர், ஆடல்
வல்லான் அல்லான்; வாழ்க, அவன் கண்ணி!
(பதிற்றுப்பத்து-56;1-3)

மன்னன் மீது கொண்ட அன்பினாலும் அவனது வீரத்தினை பறைசாற்றும் பொருட்டும் அவன் சூடியுள்ள மாலையை வாழ்த்தினர் என்பதை மேற்கண்டப் பாடல்களால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**உழவு எருதுகளை வாழ்த்துதல்**

மன்னனை பாணர்கள் வாழ்த்தி பரிசில் பெறக் கருதும் பொழுது மன்னனது மதிலின் கடைவாயிலில் நின்று கொண்டு அவரது ஆட்சியில் உழவு சிறக்க துணைபுரியும் எருதுகளை வாழ்த்திய பிறகே மன்னனை வாழ்த்தும் மரபும் காணப்பட்டது என்பதை கீழ்வரும் புறநானூற்றுப் பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

நுண்கோல் சிறுகிணை சிலம்ப ஒற்றி,
நெடுங்கடை நின்று, **பகடுபல வாழ்த்தி**,
தன்புகழ் ஏத்தினென் ஆக ....

(புறநானூறு-383;3-5)

வெள்ளி தோன்ற, புள்ளுக்குரல் இயம்ப,
புலரி விடியல் **பகடுபல வாழ்த்தி**,
(புறநானூறு-385;1-2)

**கிள்ளையை (கிளி) வாழ்த்துதல்**

வெள்ளை வரம்பி னூழி போகியும்
**கிள்ளை வாழிய** பலவே
(ஐங்குறுநூறு-281-1-2)

கிளிகளானது தினைப்புனத்தில் விளைகின்ற தினை முதலான பயிர்களை கவர்ந்து உண்பதாலேயே தலைவியானவள் தினைப்புனம் காக்க வருகிறாள். அதனால்தான் அவளைக் காணமுடிகிறது. ஆதலால் எனக்குப் பேருதவி செய்யும் கிளிகளே நீங்கள் வெள்ளம் என்னும் எண்ணிக்கையளவு பல்லூழி காலங்கள் வாழ்வீர்களாக! - என்ற தலைவனது உள்ளுறைக் கருத்தாக உள்ள ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் பறவையினங்களை வாழ்த்தும் மரபு நம் முன்னோர்களிடம் இருந்ததைநம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**தும்பியை வாழ்த்துதல்**

கொடியை; **வாழி-தும்பி**!-இந்நோய்
படுகதில் அம்ம, யான் நினக்கு உரைத்தென;
மெய்யே கருமை அன்றியும், செவ்வன்
அறிவும் கரிதோ - அறனிலோய்!
(நற்றிணை-277-1-4)

**அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி**!
(குறுந்தொகை-392;1)

சங்ககாலப் பெண்கள் தங்கள் கருத்துக்களை தலைவனிடத்து நேரடியாகச் சொல்லாமல் வண்டுகளிடமோ மற்ற பறவையினங்களிடமோ தலைவன் கேட்குமாறு உள்ளுறையாகக் (மறைமுகமாக) கூறும் மரபு காணப்பட்டது. மேலும் அவ்வாறு கூறும் முன் அவ்வுயிரினங்களை வாழ்த்திய பின்பே தாங்கள் கூற விரும்பும் கருத்துக்களை உரைத்த பாங்கு போற்றுதலுக்குரியது. இதனை நம் செவ்வியல் இலக்கியங்கள் மிக அழகாக எடுத்துரைக்கின்றன.

**பூக்களை வாழ்த்துதல்**

முல்லை! **வாழியோ, முல்லை**! நீநின்

சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ, மற்றுஇது தமியோர் மாட்டே?
(குறுந்தொகை-162; 3-6)

வினைமுற்றி மீளும் தலைமகன் முல்லைப் பூவினை வாழ்த்துவது போன்ற பாடல் இது. இப் பாடல்கள் மூலம் சங்ககால மக்கள் இயற்கையின் மேல் கொண்ட அன்பும் பரிவும் நமக்குப் புலனாகிறது.

**உணவுப் பொருள்களை வாழ்த்துதல்**

**தினையை வாழ்த்துதல்**

பலிபெறு கடவுட் பேணி, கலி சிறந்து,
நுடங்கு நிலைப் பறவை உடங்கு பீள் கவரும்;
தோடு இடம் கோடாய், கிளர்ந்து,
நீடினை விளைமோ! **வாழிய**, **தினையே!**
(நற்றிணை-251;8-11)

**கள்ளினை வாழ்த்துதல்**

..... ...... .... நார் அரி
நனை முதிர் சாடி **நறவின் வாழ்த்தி**,
(புறநானூறு-297;5-6)

கள்ளின் வாழ்த்தி, கள்ளின் வாழ்த்தி,
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக்கு அனந்தர்த் துஞ்சுவோனே,
அவன் எம் இறைவன்; யாம் அவன் பாணர்;
(புறநானூறு-316;1-4)

செவ்வியல் இலக்கியங்களில் மக்கள் தங்களின் அடிப்படை ஆதாரமாக உள்ள உண்ணும் உணவுப் பொருள்களையும் வாழ்த்திய மரபினை காணமுடிகிறது.

**முடிவுரை**

செவ்வியல் இலக்கியங்கள் சங்ககால மக்களின் மன உணர்வுகளை படம் பிடித்துக்காட்டும் காலக் கண்ணாடியாகவே உள்ளன. ஆம்! அக்கண்ணாடியில் நம் முன்னோர்களின் பண்புநலன்கள், நற் பழக்கவழக்கங்கள், அறச் சிந்தனைகள், இயற்கையோடு இணைந்த வாழ்வு முறைகள்எனப் பல்வேறு கூறுகளைக் காணமுடிகிறது. அக்கூறுகளில் ஒன்றான அஃறிணைகளை வாழ்த்திய முறைகளும் அவற்றோடு இயைந்து தங்கள் வாழ்வினைக் கட்டமைத்துக் கொண்ட முறைகளும் மிகவும் போற்றுதலுக்குரியது. இன்றைய காலக்கட்டத்திலும் நாம் நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகிறோம் என்றால் அது மிகையல்ல! எடுத்துக்காட்டாக, இன்றும் நாம் பொங்கல் திருநாளில் கதிரவனை வாழ்த்தும் முறையும்மாட்டுப் பொங்கல் திருநாளில் நம் உழவிற்கு உறுதுணையாக

உள்ள எருதுகளை வாழ்த்திக் கொண்டாடும் முறையும் முழுமதி நாளிலும் மூன்றாம் பிறை நாளிலும் நிலவினை வாழ்த்தி வழிபடும் முறையும் நம்மிடம் காணப்படுகிறது. மேலும் பல கிராமப் புறங்களில் வேளாண்மையில் கிடைத்த உணவுப் பொருள்களையெல்லாம் காக்கும் தெய்வங்களுக்குப் படையலிட்டு வாழ்த்தும் மரபும் காணப்படுகிறது. தற்பொழுதும் ஆறுகளில் நீரினைப்
பாசனத்திற்காக திறந்துவிடும் பொழுது மதகுகளிலும் ஆறுகளிலும் பூக்களைத் தூவி வாழ்த்திய பிறகே மதகுகளை திறந்துவிடுகின்றனர். இருப்பினும் அஃறிணைகளை வாழ்த்தும் மரபு நம் எதிர்கால தலைமுறையினருக்கு குறைந்து கொண்டே வருகிறது என்பதும் மிக வருந்தத்தக்க நிலையே ஆகும். எனினும் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் ஜீவ காருண்ய ஒழுக்கத்தினையும் அஃறிணைகளை வாழ்த்தும் முறையினையும் நம் செவ்வியல் இலக்கியங்களின் வழியில் இது போன்றக் கட்டுரைகள் மூலம் நம் சந்ததியினருக்குக் கொண்டு சேர்ப்போமாக!


| வ.எண் | நூல்கள் | உரையாசிரியர்கள் |
|---|---|---|
| 1. | ஆய்வியல் நெறிமுறைகள் | முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்<br>17.ம் பதிப்பு-2012 |
| 2. | புதிய நோக்கில் தமிழர் இலக்கிய வரலாறு | முனைவர். தமிழண்ணல்<br>16.ம் பதிப்பு-2000 |
| 3. | இலக்கிய வரலாறு | புலவர்.சோம.இளவரசு-ம.பதிப்பு-1998 |
| 4. | இணையதள முகவரி | Tamildigitallibrary.in |
| 5. | இணையதள முகவரி | Tamilvu.org |